## May 23, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மத்திய அரசுக்கு வருவாய் உபரியாக இதுவரை இல்லாத வகையில் ரூ.2.87 லட்சம் கோடியை வழங்கவுள்ளதாக ரிசர்வ் வங்கி அறிவித்தது.

(i) இது கடந்த 2024-25-ஆம் நிதியாண்டில் மத்திய அரசுக்கு ரிசர்வ் வங்கி வழங்கிய ரூ.2.69 லட்சம் கோடியைவிட 6.7 சதவீதம் அதிகமாகும்.

(ii) மேற்காசிய விவகாரத்தால் கச்சா எண்ணெய் விநியோகம் தடைபட்டு இறக்குமதி கட்டணம் அதிகரித்துள்ள சூழலில் மத்திய அரசின் நிதிநிலையை வலுப்படுத்தும் விதமாக வருவாய் உபரியை ரிசர்வ் வங்கி வழங்கவுள்ளது.

(iii) இதுதொடர்பாக ரிசர்வ் வங்கி வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'இடர் ஒதுக்கீடுகள் மற்றும் சட்டரீதியிலான நிதி ஒதுக்கீடுகளுக்கு முன்பாக ரிசர்வ் வங்கியின் நிகர வருவாய் 2025-ஆம் நிதியாண்டில் ரூ.3.13 லட்சம் கோடியாக இருந்தது, 2026-ஆம் நிதியாண்டில் ரூ.3.96 லட்சம் கோடியாக உயர்ந்தது. இதனால், ரிசர்வ் வங்கியின் நிதி இருப்புநிலை 20.61 சதவீதம் அளவுக்கு விரிவடைந்து கடந்த மார்ச் 31-ஆம் தேதி நிலவரப்படி ரூ. 91.97 லட்சம் கோடியாக உயர்ந்தது.

(iv) இந்த நிலையில், அண்மையில் நடைபெற்ற வங்கியின் மத்திய இயக்குநர் வாரியக் கூட்டத்தில், உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதாரச் சூழல் மற்றும் எதிர்கால இடர்ப்பாடுகள் ஆகியவற்றை ஆய்வு செய்ததின் அடிப்படையில், 2025-26-ஆம் நிதியாண்டுக்கு இடர் காப்பு நிதிக்கு ரூ.1.09 லட்சம் கோடியை மாற்ற முடிவு செய்யப்பட்டது. கடந்த ஆண்டில் ரூ.44,861 கோடி மாற்றப்பட்ட நிலையில், தற்போது இரண்டு மடங்குக்கு மேல் மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

(v) அதோடு, மத்திய அரசுக்கு 2025-26-ஆம் நிதியாண்டின் வருவாய் உபரியாக ரூ.2.87 லட்சம் கோடியை வழங்கவும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது' என்று தெரிவிக்கப்பட்டது.

2. குறுகிய தொலைவு இலக்குகளைத் துல்லியமாக தாக்கவல்ல அக்னி-1 பாலிஸ்டிக் ரக ஏவுகணை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

(i) பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் (டிஆர்டிஓ) உருவாக்கப்பட்ட இந்த ஏவுகணை, 700 கி.மீ. முதல் 1,200 கி.மீ வரை பாயும். 2,500 கிலோ வரையிலான வெடிகுண்டுகள் அல்லது அணு ஆயுதங்களை சுமந்து சென்று தாக்கும் திறன் கொண்டது.

(ii) கடந்த 1979-ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டில் உள்ள அக்னி-1 ஏவுகணை, ஒடிஸாவின் சந்திப்பூரில் உள்ள சோதனை தளத்தில் பரிசோதிக்கப்பட்டது. அப்போது, ஏவுகணையின் செயல்பாட்டு-தொழில்நுட்ப தரநிலைகள் சோதிக்கப்பட்டன. இந்தச் சோதனையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அக்னி-1 ஏவுகணை துல்லியமா கத்தாக்கி அழித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(iii) இந்தியாவிடம் 700 கி.மீ. முதல் 3,500 கி.மீ. வரை பாய்ந்து தாக்கக் கூடிய அக்னி 1 முதல் 4 வரையிலான ஏவுகணைகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

3. இந்தியாவில் எபோலா வைரஸ் பரவாமல் தடுக்க கண்காணிப்பைத் தீவிரப்படுத்துவதுடன், மருத்துவ தயார்நிலையை உறுதி செய்ய வேண்டும் என்று அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதே சங்களுக்கு மத்திய சுகாதார அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

(i) பாதிக்கப்பட்ட நாடுகளில் இருந்து வரும் பயணிகளிடம் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளவும் அறிவு றுத்தப்பட்டுள்ளது.

(ii) காங்கோ குடியரசு, உகாண்டா ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள ஏபோலா வைரஸ் பரவலை சர்வதேச கவலைக்குரிய பொது சுகாதார அவசர நிலையாக உலக சுகாதார அமைப்பு அறிவித்ததைத் தொடர்ந்து, மேற்கண்ட அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

(iii) காங்கோ குடியரசு, உகாண்டா ஆகிய நாடுகளில் வேகமாக பரவி வரும் எபோலா தொற்றால் 100-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துவிட்ட நிலையில், 600-க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(iv) இந்நிலையில், அனைத்து மாநில தலைமைச் செயலர்கள் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகிகளுக்கு மத்திய சுகாதாரத் துறை செயலர் புண்ய சலிலா ஸ்ரீவாஸ்தவா எழுதியுள்ள கூறப்பட்டிருப்பதா கடிதத்தில்வது:

- காங்கோ குடியரசு, உகாண்டா மட்டுமன்றி இந்நாடுகளையொட்டிய தெற்கு சூடான் போன்ற நாடுகளிலும் எபோலா வைரஸ் பரவியிருக்கலாம் என கருதப்படுகிறது.
- தற்போதைய சூழலில், பாதிக்கப்பட்ட ஆப்பிரிக்கப் பகுதியைத் தாண்டி, பிற பிராந்திய நாடுகளில் இந்நோய் பரவியிருக்க வாய்ப்பு குறைவு என மதிப்பிடப்பட்டுள்ளது.

(v) மத்திய அரசு அறிவுறுத்தல்:

- எபோலா பரவலை சர்வதேச கவலைக்குரிய பொது சுகாதார அவசரநிலையாக உலக சுகாதார அமைப்பு அறிவித்ததைத் தொடர்ந்து, சுகாதார அமைப்பு முறையின் அனைத்து நிலைகளிலும் போதிய தயார்நிலை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம்.
- காய்ச்சல், உடல் சோர்வு, தசை வலி, தலை வலி, தொண்டைப் புண், வாந்தி, வயிற்றுப் போக்கு, வயிற்று வலி, தோல் மற்றும் கண்களில் அழற்சி ஆகியவை எபோலா தொற்றின் அறிகுறிகளாகும்.
- பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சமீபத்தில் பயணம் மேற்கொண் டவர்களிடம் எபோலா தொற்று அறிகுறிகள் உள்ளதா என்பதைக் கண்டறிய ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும்.
- தனிமைப்படுத்துதல் வசதிகள், பிரத்யேக ஆம்புலன்ஸ் வாகனங்கள், பயிற்சி பெற்ற பணியாளர்கள், தனிநபர் பாதுகாப்பு உபகர ணங்கள், பரிசோதனைக் கூடங்கள் உள்ளிட்டவற்றை தயார்படுத்த வேண்டும்.
- சந்தேகத்துக்குரிய மாதிரிகளைப் பரிசோதித்து, எபோலா பாதிப்பு உள்ளதா என்பதை உறுதி செய்ய மகாராஷ்டிர மாநிலம், புணேயில் உள்ள இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் தேசிய வைராலஜி நிறுவனம் முழு அளவில் தயாராக உள்ளது. சூழ்நிலைக்கு ஏற்றவாறு, கூடுதல் ஆய்வகங்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் இதுவரை எபோலா வைரஸ் பாதிப்பு எதுவும் உறுதி செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

4. ஆப்பிரிக்க நாடான காங்கோ குடியரசில் எபோலா தொற்றால் உயிரிழந்த ஒருவரின் உடலைத் தங்களிடம் ஒப்படைக்க அதிகாரிகள் மறுத்ததால், ஆத்திரமடைந்த பொதுமக்கள் அங்குள்ள சிகிச்சை மையத்துக்குத் தீ வைத்தனர்.

(i) எபோலாவால் உயிரிழந்தவர்களின் உடல்கள் மூலம் தொற்று வேகமாகப் பரவக்கூடும் என்பதால் அதிகாரிகளே இறுதிச் சடங்குகளை நடத் துகின்றனர். இது தங்களின் பழக்கவழக்கங்களுக்கு எதிரானது எனக் கூறி மக்கள் போராட்டங்கள் நடத்தி வருவது, நோய்த் தடுப்பு பணியில் சவாலாக உருவெடுத்துள்ளது.

(ii) இதனிடையே, காங்கோ குடியரசில் நிலவிவரும் எபோலா பாதிப்புக்கான அபாய மதிப்பீட்டை 'மிகஉயர்' நிலைக்கு உலக சுகாதார அமைப்பு உயர்த்தியுள்ளது. அதேநேரம், அண்டை நாடுகளுக்கான அபாயம் 'உயர்' நிலையில், உலகளாவிய அளவில் 'குறைந்த' நிலையிலேயே இருக்கிறது.

5. பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப், நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக சீனாவுக்கு சனிக்கிழமை (மே 23) புறப்படுகிறார்.

(i) சீனாவின் ஹாங்சோ நகரில் இருந்து பயணத்தைத் தொடங்கும் ஷாபாஸ் ஷெரீஃப், அங்கு நடைபெறும் பாகிஸ்தான்-சீனா வர்த்தக முதலீட்டு மாநாட்டுக்குத் தலைமை தாங்குகிறார்.

(ii) மேலும், இப்பயணத்தில் சீன அதிபர் ஷி ஜின் பிங், பிரதமர் லீ கியாங் ஆகியோரைச் சந்தித்து இருதரப்பு அரசியல், பொருளாதார, உத்திசார் உறவுகள் குறித்து அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

(iii) பாகிஸ்தான்-சீனா ராஜீய உறவுகள் 1951-இல் நிறுவப்பட்டு, 75 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி இப்பயணம் அமைகிறது.

(iv) சீனாவுடன் ராஜீய உறவை ஏற்படுத்திய முதல் முஸ்லிம் நாடு பாகிஸ்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இதையொட்டி, பாகிஸ்தான் அரசு 75 ரூபாய் மதிப்பிலான சிறப்பு நினைவு நாணயம் ஒன்றையும் வெளியிடவுள்ளது.

6. பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக கூட்டுப் பணிக் குழு அமைப்பது உள்பட இந்தியா, சைப்ரஸ் இடையே 6

ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.

(i) தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் சைப்ரஸ் அதிபர் நிகோஸ் கிறிஸ்டோடுலிடீஸ் இடையே நடைபெற்ற விரிவான பேச்சுவார்த்தைக்குப் பின் இந்த ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. அடுத்த 5 ஆண்டுகளுக்கான பாதுகாப்பு ஒத்துழைப்பு செயல்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

(ii) கிழக்கு மத்திய தரைக் கடலில் உள்ள தீவு நாடான சைப்ரஸ், ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கிறது. அந்நாட்டின் அதிபர் நிகோஸ் கிறிஸ்டோடுலிடீஸ் மூன்று நாள்கள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு வந்தார்.

(iii) இருதரப்பு பேச்சுவார்த்தை:

- தில்லியில் பிரதமர் மோடியை சந்தித்த அவர், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, கல்வி, ஆராய்ச்சி, விண்வெளி, உள்கட்டமைப்பு, கப்பல் போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவை விரிவாக்குவது குறித்தும், பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய-சர்வதேச விவகாரங்கள் குறித்தும் இருவரும் ஆலோசித்தனர்.
- இதைத் தொடர்ந்து, கல்வி, புத்தாக்கம், தொழில்நுட்பம், கலாசாரம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக கூட்டுப் பணிக் குழுவை அமைப்பது என மொத்தம் 6 ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. அடுத்த 5 ஆண்டுகளுக்கான பாதுகாப்பு செயல்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. பரஸ்பர இடப்பெயர்வு மற்றும் போக்குவரத்துக்கான செயல்திட்டத்தை விரைவில் இறுதி செய்யவும் முடிவெடுக்கப்பட்டது.

(iv) கூட்டாக உத்திசார் கூட்டுறவு:

பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் பிரதமர் மோடி கூறியதாவது:

- கடந்த 10 ஆண்டுகளில் சைப்ரஸிடம் இருந்து இந்தியாவுக்கான முதலீடுகள் இரட்டிப்பாகியுள்ளது. இந்தியாவின் முதல் 10 முதலீட்டு நாடுகளில் ஒன்றாக சைப்ரஸ் விளங்குகிறது. இரு நாடுகளுக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கை வலுவடைந்துள்ளது. இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தால், எண்ணற்ற புதிய வாய்ப்புகள் உருவாகியுள்ளன.
- இதை சாதகமாகப் பயன்படுத்தி, அடுத்த 5 ஆண்டுகளில் முதலீடுகளை மீண்டும் இரட்டிப்பாக்க இலக்கு நிர்ணயித்துள்ளோம். இந்த இலக்கை எட்டுவதற்காக, இருதரப்பு நம்பிக்கைக்குரிய உறவுகளை உத்திசார் கூட்டுறவு அந்தஸ்துக்கு உயர்த்தியுள்ளோம். இந்தியா-சைப்ரஸ் நட்புறவு மிகவும் வலிமையானது; எதிர்காலத்துக்கானது. கடல்சார் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பில் ஒத்துழைப்பை விரிவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார் பிரதமர் மோடி.

7. பாகிஸ்தான் மற்றும் வங்கதேச நாடுகளுடனான 6,000 கி.மீ. தொலைவு எல்லைப் பகுதியில் யாரும் ஊடுருவ முடியாத வகையில், 'ஸ்மார்ட் எல்லை' திட்டம் அடுத்த ஆண்டு செயல்படுத்தப்பட உள்ளது' என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.

(i) எல்லைப் பாதுகாப்புப் படை (பிஎஸ்எஃப்) சார்பில் தில்லியில் ஏற்பாடு செய்யப்பட்ட பிஎஸ்எஃப்-இன் முதல் தலைமை இயக்குநர் கே.எஃப். ருஸ்தம்ஜி நினைவு சொற்பொழிவு நிகழ்ச்சியில் பங்கேற்றபோது இக்கருத்தை அமித் ஷா தெரிவித்தார். நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசியதாவது:

- எல்லை பாதுகாப்புப் படை அடுத்த ஆண்டில் 60-ஆம் ஆண்டு தொடக்க நிகழ்வை சந்திக்கவிருக்கும் நிலையில், பாகிஸ்தான், வங்கதேசத்தை ஒட்டிய 6,000 கி.மீ. தொலைவு எல்லையில் 'ஸ்மார்ட் எல்லை திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம், அடுத்த ஓராண்டில் யாரும் ஊடுருவ முடியாத வகையிலான எல்லைகளாக மாற்றியமைக்கப்படும்.
- நவீன தொழில்நுட்பம், ஆளில்லா விமானங்கள் (ட்ரோன்), அதிநவீன கண்காணிப்பு ரேடார்கள், நவீன கேமராக்கள் ஆகியவற்றின் உதவியுடன் இந்த 'ஸ்மார்ட் எல்லை' திட்டம் செயல்படுத்தப்படும்.
- ஊடுருவல்களைத் தடுப்பதன் மூலம் இந்தியாவின் மக்கள்தொகையை செயற்கையாக மாற்றும் சதியை பிஎஸ்எஃப் வீரர்கள் முறியடிக்க வேண்டும்.

8. இந்தியாவின் அணுசக்தித் துறையில் ஒரு முக்கிய மைல்கல்.

ஏப்ரல் 6, 2026 அன்று, கல்பாக்கத்தில் அமைந்துள்ள இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் (IGCAR) உள்ள 500 மெகாவாட் திறன் கொண்ட முன்மாதிரி விரைவு ஈனுலை (PFBR), தனது முதல் நிலை அணுக்கரு வினையை (criticality) வெற்றிகரமாக எட்டியது.

(i) ஒரு உலகளாவிய அறிவியல் மைல்கல்

- உலகளாவிய முன்னோடி: இந்தச் சாதனையுடன், வணிக ரீதியிலான அளவிலான முன்மாதிரி விரைவு ஈனுலையை இயக்கும் உலகின் இரண்டாவது நாடாக (ரஷ்யாவிற்குப் பிறகு) இந்தியா உருவெடுத்துள்ளது.
- "ஈனுலை" (Breeder) சார்ந்த நன்மை: வழக்கமான அணு உலைகளைப் போலன்றி, ஒரு விரைவு ஈனுலை (FBR) தான் பயன்படுத்தும் எரிபொருளை விட அதிகமான எரிபொருளை உற்பத்தி செய்கிறது.
- மூன்று கட்டத் திட்டம்: இந்த வெற்றி, இந்தியாவின் மூன்று கட்ட அணுசக்தித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு இந்தியா மாறுவதைக் குறிக்கிறது; இக்கட்டத்தில் புளூட்டோனியம் பயன்படுத்தப்படுகிறது. மூன்றாம் கட்டத்தில் தோரியம் மற்றும் யுரேனியம்-233 ஆகியவை பயன்படுத்தப்பட உள்ளன.

(ii) முற்றிலும் உள்நாட்டுச் சாதனை

- தற்சார்பு நிலை: இந்த PFBR உலை, IGCAR மற்றும் BHAVINI (பாரதிய நாப்கியா வித்யுத் நிகம் லிமிடெட்) ஆகியவற்றின் கூட்டு முயற்சிகள் மூலம், முழுமையாக உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு, நிதியளிக்கப்பட்டது.
- உலகளாவிய தோல்விகளை வெல்லுதல்: அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் போன்ற வல்லரசுகள் தொழில்நுட்பக் கோளாறுகள் மற்றும் சோடியம் கசிவுகள் காரணமாக இந்தத் தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெறத் தவறிய நிலையில், இந்திய விஞ்ஞானிகள் இத்தகைய சவால்களை வெற்றிகரமாகக் கடந்துள்ளனர்.
- சர்வதேசப் பாராட்டு: சர்வதேச அணுசக்தி முகமையின் (IAEA) தலைமை இயக்குனர் ரஃபேல் குரோஸ்ஸி, இந்தியாவின் இந்த முன்னேற்றத்தை எதிர்கால எரிபொருள் நிலைத்தன்மையை நோக்கிய ஒரு முக்கியப் பாதையாகப் பாராட்டியுள்ளார்.

(iii) தோரியத்தின் உத்திசார் பயன்பாடு

- பரந்த இருப்புக்கள்: இந்தியாவிடம் யுரேனியம் இருப்புக்கள் குறைவாகவே உள்ளன; ஆனால் அதன் கடற்கரைப் பகுதிகள் (தமிழ்நாடு, கேரளா, ஒடிசா போன்றவை) மற்றும் ஆற்றுப் படுகைகளில் தோரியத்தின் பரந்த இருப்புக்கள் நிறைந்துள்ளன.
- நீண்டகால எரிசக்திப் பாதுகாப்பு: தோரியத்தை யுரேனியம்-233 ஆக மாற்றுவதற்கு இந்த PFBR உலை இன்றியமையாததாகும். இந்தியாவின் தோரிய இருப்புக்கள், அடுத்த 400 ஆண்டுகளுக்கு ஆண்டுதோறும் 500 ஜிகாவாட் (GW) மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை; இது இந்தியாவின் தற்போதைய உச்சபட்ச மின் தேவைக்கு இருமடங்காகும்.

(iv) தேசிய அளவிலான தாக்கம் மற்றும் எதிர்கால இலக்குகள்

- லட்சக்கணக்கான வீடுகளுக்கு மின்சாரம்: கல்பாக்கத்தில் அமைந்துள்ள இந்த ஒற்றை அணு உலையானது, சுமார் 30 லட்சம் (3 மில்லியன்) வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும் திறனைக் கொண்டுள்ளது.
- தூய்மையான எரிசக்தி இலக்குகள்: 2070-ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜிய கரியமில வாயு வெளியேற்றத்தை அடைவதற்கும், 2047-ஆம் ஆண்டுக்குள் அணுசக்தி உற்பத்தியை 100 ஜிகாவாட்டாக உயர்த்துவதற்கும் இந்தியா கொண்டுள்ள இலக்கிற்கு இந்தத் திட்டம் மிகவும் முக்கியமானது.
- பொருளாதார சுதந்திரம்: உள்நாட்டு தோரியத்தைப் பயன்படுத்துவதன் மூலம், இந்தியா விலை உயர்ந்த யுரேனியம் இறக்குமதியைச் சார்ந்திருப்பதை கணிசமாகக் குறைத்து, சர்வதேச மோதல்களால் ஏற்படும் உலகளாவிய எரிபொருள் விலை ஏற்ற இறக்கங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

(v) பாதுகாப்பு மற்றும் புவிசார் அரசியல் கவலைகள்

- தாக்குதல்களுக்கு ஆளாகும் தன்மை: அணு உலைகளில் உள்ளமைக்கப்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் இருந்தாலும், அவை திட்டமிட்ட ஏவுகணைத் தாக்குதல்களைத் தாங்கும் வகையில் வடிவமைக்கப்படவில்லை. உக்ரைன் மற்றும் ஈரானில் உள்ள அணுமின் நிலையங்கள் மீதான சமீபத்திய தாக்குதல்கள் இதற்கு முக்கியக் கவலைகளாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன.
- கொள்கை மற்றும் ஒழுங்குமுறை: நாடுகள் இராணுவ அணுசக்தி தொழில்நுட்பத்தை உருவாக்கும் எல்லையைத்

தாண்டாமல் இருப்பதை உறுதிசெய்ய, அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தங்களை கடுமையாக அமல்படுத்துமாறு சர்வதேச அணுசக்தி முகமையை (IAEA) இந்தியா வலியுறுத்துகிறது.

- தனியார் பங்கேற்பு: 2025-ஆம் ஆண்டின் சாந்தி சட்டம், அணுசக்தித் துறைகளை நிறுவுவதிலும் இயக்குவதிலும் தனியார் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களை ஈடுபடுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கிறது, இருப்பினும் அதன் நீண்டகால தாக்கம் என்னவாக இருக்கும் என்பது இன்னும் தெரியவில்லை.

9. இந்தியாவில் செயலற்ற கருணைக்கொலையின் சட்டப் பயணம் மற்றும் தற்போதைய நிலை.

(i) வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு மற்றும் முதல் அமலாக்கம்

- வரலாற்றுத் தீர்ப்பு: மார்ச் 11 அன்று, இந்திய உச்ச நீதிமன்றம் செயலற்ற கருணைக்கொலையை அனுமதிக்கும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியது, இது தேசிய அளவில் குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்த்துள்ளது.
- முதல் வழக்கு: இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து, 31 வயதான முன்னாள் பொறியியல் மாணவரான ஹரிஷ் ராணா, இந்தியாவில் சட்டப்பூர்வமான "செயலற்ற கருணை மரணத்தை" மேற்கொண்ட முதல் நபர் ஆனார். விடுதியின் கூரையிலிருந்து விழுந்த பிறகு, அவர் 13 ஆண்டுகளாக சுயநினைவற்ற நிலையில் இருந்தார்.
- நீதித்துறைத் தலையீடு: அதிகரித்து வரும் மருத்துவச் செலவுகள் காரணமாக அவரது பெற்றோர் ஆரம்பத்தில் டெல்லி உயர் நீதிமன்றத்தை அணுகினர், ஆனால் அவர்களது மனு தள்ளுபடி செய்யப்பட்டது. மேல்முறையீட்டின் பேரில் உச்ச நீதிமன்றம் இறுதியில் இந்த உத்தரவை வழங்கியது.

(ii) அரசியலமைப்பு அடிப்படை மற்றும் வரையறைகள்

- கண்ணியத்திற்கான உரிமை: கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்யும் இந்திய அரசியலமைப்பின் 21வது சரத்து, கண்ணியத்துடன் இறப்பதற்கான உரிமையையும் உள்ளடக்கியது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- செயலற்ற கருணைக்கொலை வரையறை: இந்தியா குறிப்பாக "செயலற்ற" கருணைக்கொலையை (அனுமதிக்கப்படும் கருணைக்கொலை) அனுமதிக்கிறது. இது, குணமடைய எந்த நம்பிக்கையும் இல்லாத நோயாளிகளுக்கு இயற்கையான மரணத்தை அனுமதிப்பதற்காக, உணவு, மருந்து அல்லது செயற்கை ஆதரவு போன்ற உயிர் காக்கும் நடவடிக்கைகளை நிறுத்துவதை உள்ளடக்கியது.

(iii) உலகளாவிய சட்டச் சூழல்

- முன்னோடி நாடுகள்: நெதர்லாந்து மற்றும் பெல்ஜியம் ஆகியவை கருணைக்கொலையை சட்டப்பூர்வமாக்கிய முதல் நாடுகள். அவற்றைத் தொடர்ந்து லக்சம்பர்க், ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகல் ஆகிய நாடுகள் பின்பற்றின.
- பல்வேறு அணுகுமுறைகள்: சுவிட்சர்லாந்து, குணப்படுத்த முடியாத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியுடன் கூடிய தற்கொலையை அனுமதிக்கிறது, அதே நேரத்தில் கனடா மற்றும் பல அமெரிக்க மாநிலங்கள் (வாஷிங்டன், ஓரிகன் மற்றும் மொன்டானா உட்பட) மருத்துவரின் உதவியுடன் கூடிய கருணை மரணங்களை அனுமதிக்கின்றன.

(iv) இந்தியாவில் கருணைக்கொலை சட்டங்களின் பரிணாம வளர்ச்சி

- ஆரம்பகால சட்ட மாற்றங்கள் (1994–1996): 1994-ல், உச்ச நீதிமன்றம் ஆரம்பத்தில் சட்டப்பிரிவு 21 வாழாமல் இருப்பதற்கான உரிமையையும் உள்ளடக்கியது என்று பரிந்துரைத்தது, இது தற்கொலைக்கு எதிரான சட்டத்திற்கு சவால் விடுத்தது. இருப்பினும், 1996-ல், அது இந்த நிலைப்பாட்டை மாற்றி, மரணத்தைத் தூண்டுவது ஒரு குற்றச் செயலாகவே நீடிக்கிறது என்று தீர்ப்பளித்தது.
- சட்ட ஆணையத்தின் பரிந்துரைகள்: 2006-ல், சட்ட ஆணையத்தின் 196-வது அறிக்கை, நீண்டகால, குணப்படுத்த முடியாத நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இடமளிக்கும் வகையில், இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 309-ல் சட்ட மாற்றங்களைப் பரிந்துரைத்தது.
- அருணா ஷான்பாக் வழக்கு (2011): 42 ஆண்டுகளாக கோமாவில் இருந்த ஒரு செவிலியர் சம்பந்தப்பட்ட இந்த முக்கியத்துவம் வாய்ந்த வழக்கு, அவரது மரணத்திற்கான குறிப்பிட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்ட போதிலும், செயலற்ற கருணைக்கொலைக்கான கடுமையான வழிகாட்டுதல்களை உச்ச நீதிமன்றம் நிறுவ வழிவகுத்தது.

(v) நடைமுறை வழிகாட்டுதல்கள் மற்றும் கண்ணோட்டத்தில் மாற்றம்

- உயர் நீதிமன்ற மேற்பார்வை: தற்போதைய வழிகாட்டுதல்களின்படி, செயலற்ற கருணைக்கொலைக்கான மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, தலைமை நீதிபதி மற்றும் மற்றொரு நீதிபதி தலைமையிலான அமர்வால் விசாரிக்கப்பட வேண்டும்.
- மருத்துவ மதிப்பீடு: நீதிமன்றம் ஒரு உத்தரவைப் பிறப்பிப்பதற்கு முன்பு, நோயாளியை மதிப்பீடு செய்து பரிந்துரைகளை வழங்க மூன்று நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட வேண்டும்.
- "கருணைக் கொலை" என்பதிலிருந்து "கருணை மரணம்" என்பதற்கு: காமன் காஸ் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் 2018 ஆம் ஆண்டு பொதுநல வழக்கு சட்ட மற்றும் சமூகக் கண்ணோட்டத்தை மாற்றியது. "கொலை" என்று பார்க்கப்படுவதற்குப் பதிலாக, இப்போது அது "கருணை மரணம்" என்று பார்க்கப்படுகிறது; இது, வாழ்வதற்கான எந்த வாய்ப்பும் இல்லாமல், உடலும் மனமும் 100% செயலற்ற நிலையில் உள்ள தனிநபர்களுக்கானது